# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

**IN THE MAHILA COURT, ALLIKULAM, SESSIONS JUDGE.**

Case No. **S.C. 1/2014** dated: 17.02.2021.

**எதிரி தரப்பு சாட்சி - DW1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. செங்குட்டுவன் |
| Age | : | |
| Father's/Husband’s name | : | திரு. ராமன் |
| **Address** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of February 2021.

**<u>முதல் விசாரணை எதிரி தரப்பில்-</u>**

நான் அட்வகேட் கிளர்க்காக பணிபுரிந்து வருகிறேன். எதிரிகள் தரப்பில் இன்றைய தினம் நீதிமன்றத்தில் சாட்சியாக ஆஜராகியுள்ளேன். இவ்வழக்கில் இறந்து போன ரேவதி எனது மனைவி. எனக்கும் ரேவதிக்கும் 2008ம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. எங்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளன. நானும் எனது மனைவியும் சந்தோசமாக தான் வாழ்ந்தோம். எனது மாமியார் எங்களுடன் பேச்சுவார்த்தை இல்லாமல் ஆகிவிட்டார். எனது மாமியார் அவரது கணவர் வேலுசாமியை விட்டுவீட்டு மேற்படி வேலுச்சாமியிடம் வேலை பார்த்த கோவிந்தசாமிண என்பவருடன் வந்து குடும்பம் நடத்தி வருகிறார்

S.J.

என்பதும் எங்களிடம் கூறியதுபோல் எனது மனைவியின் தகப்பனார் கோவிந்தசாமி அல்ல என்பதும் எனக்கு தெரியவந்தபிறகு நான் எனது மாமியாருடன் பேசுவது கிடையாது. எனது மனைவி கர்ப்பமானது முதல் எதற்கு நாங்கள் அழைத்தாலும் எனதுமாமியாரும், கோவிந்தசாமியும் வரமாட்டார். நான் எனது மாமனார் வேலுசாமியிடம் அடிக்கடி போனில் பேசுவேன். எனது மனைவியும் பேசுவார். எனது மாமியாரும், கோவிந்தசாமி எனது வீட்டில், வாடகைக்கு இருந்தவர்கள் தான். பின்னிட்டு காலி செய்து சென்றார்கள். எங்களது வீட்டிலிருந்து எனது மாமியார் வீடு 30 வீடு தள்ளி இருந்தது. 24.10.2011 ல் எனது மகனுக்கு பிறந்தநாள் வரயிருந்த நிலையில் 18ம் தேதி நான் லீவு போட்டிருந்தேன். எனது மனைவி தான் வேலை சென்றுவிட்டு வந்தபிறகு எனது மகனுக்கு செயின் எடுக்கலாம் என்று கூறியதன் பேரில் வேலைக்கு செநன்றேன். மாலை 5.30மணிக்கு வீட்டிற்கு வந்தபோது எனது அக்காவும், எனது அண்ணியான 1வது எதிரியும் வேறு இரண்டு, மூன்று பெண்களும் சேர்ந்து எனது மனைவியும் ஆட்டோவில் ஏற்றினார்கள். நான் எனது அம்மாவிடம் என்ன ஆயிற்று என்று கேட்டபோது எனது மனைவி குழந்தையை குளிப்பாட்டி எனது தாயாரிடம் கொடுத்துவிட்டு குழந்தைக்கு கொடுப்பதற்காக சாதத்தை மிக்சீல் அரைக்கும்போது கரண்ட் ஷாக் அடித்து விட்டதாக கூறினார். நான் ஆட்டோவிற்கு பின்னாடியே வண்டியை எடுத்துகொண்டு மருத்துவமனைக்கு சென்றேன். நாங்கள் சுந்தரம் மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவர் பரிசோதித்து பார்த்துவிட்டு கரண்டு ஷாக் அடித்தால் இரத்த உறைவு ஏற்பட்டிருப்பதால் ஐசியு வில் வைக்கவேண்டும் என்று கூறி எனது மனைவியை மாடியில் உள்ள ஐசியுவிற்கு அழைத்து சென்று விட்டார். எங்களை யாரையும் உள்ளே விடவில்லை. ஒருமணிநேரம் கழித்து எங்களை ஒவ்வொருவராக பார்க்கவிட்டார்கள். ஒரு போலீசார் வந்து பார்த்துவிட்டு சென்றார். இரவு 10 மணிக்கு மருத்துவமனையில் இருந்தவர்கள் என்னை

அழைத்து பல்ஸ் குறைந்து கொண்டே வருவதாக கூறினார்கள். இரவு 12.15 மணியளவில் நான் எனது மனைவியின் அருகே சென்று அழைத்தபோது அவரால் கண்ணை திறக்கமுடியவில்லை. கண்ணிலிருந்து தண்ணியாக வந்தது. இரவு 12.45 மணிக்கு எனது மனைவி இறந்து விட்டதாக கூறினார்கள். நான் 18ம் தேதி வீட்டிற்குள் வரும்போது எந்த சம்பவமும் நடைபெறவில்லை. எனது மாமியார் மறுநாள் வரதட்சணை கொடுமை என்று புகார் கொடுத்தார். ஆர்டிஓ வீட்டிற்கு அருகே வந்து விசாரித்தபோது வரதட்சணை கொடுமை இல்லை என்றே அக்கம்பக்கத்திலுள்ளோர் கூறினார்கள். அதன்பின்பு எனது மாமியார் எனது மனைவியின் பிரேதத்தை என்னிடம் கொடுத்துவிடுமாறு கூறிவிட்டு சென்றுவிட்டார். நான் எனது மனைவியை திருமணம் செய்ததிலிருந்து எனது மாமியாரோ, கோவிந்தசாமியோ எனது மனைவிக்கோ பிள்ளைகளுக்கோ எதுவும் செய்தது கிடையாது. சிபிசிஐடி போலீசார் சுமார் 1வருடம் கழித்து என்னை போனில் அழைத்து விசாரணைக்கு வருமாறு கூறினார்கள். சிபிசிஐடி போலீசார் விசாரித்தார்கள். நீதிமன்றத்திலிருந்து வழங்கப்பட்ட சிடி நகலை எனது அக்கா மூலம் நான் வாங்கி பார்த்தபோது அதில் 2 நிமிடம்தான் எனது மனைவியின் உடல் போஸ்ட்மாட்டத்தின் போது இருந்தது. எனது மனைவிக்கு வலதுபுற நெற்றிபொட்டிலும், வலது மார்பிலும் உள்ள மச்சங்களோ இடது தொடையிலிருந்த பெரிய மீன் வடிவிலான மச்சமோ வயிற்றின் வலது புறம் கீழ்பகுதியில் அறுவைசிகிச்சை செய்த தழும்போ சிடி நகலில் காணப்பட்ட பிரேத பரிசோதனையில் இருந்த பிரேதத்தில் இல்லை. எனது மனைவிக்கு முழங்காலுக்கு கீழ வரை முடி இருக்கும். அதுவும் மேற்படி பிரேத்தில் காணப்படவில்லை. சிடி நகலில் 2 நிமிடத்திற்குகு பிறகு இருக்கும் பிரேதம் எனது மனைவியுடையதே இல்லை.

**குறுக்குவிசாரணை-**

எனது மனைவியை நான் வீட்டிற்கு வரும்போதே ஆட்டோவில் ஏற்றிவிட்டார்கள். எனது மனைவியின் முகத்தை பார்க்கவில்லை. மருத்துவமனைக்கு சென்றபோது எனது மனைவியை பார்த்தேன். எனது மனைவிக்கு மருத்துவமனைக்கு அழைத்துசென்றபோது கழுத்திலும். முகத்திலும் வெட்டு காயங்கள் இருந்தன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி காயங்களை பார்த்துவிட்டு தான் எனது மாமியார் சந்தேகத்தின் அடிப்படையில் புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது மனைவி இறந்த பிறகு எனக்குரிய காலிமனையை எனது மாமியார் கேட்டு நான் தர மறுத்ததால் பொய்புகார் கொடுக்கப்பட்டது. எங்களது வீட்டில் அசா.2 சம்பவ சமயத்தில் வாடகைக்கு இருந்தார். எனது அம்மா எனது மனைவி சேலையில் தூக்குபோட்டு இறந்து விட்டதாக கூறி ஒரு சேலையை அசா.14 லதாவிடம் கொடுத்து அதனை அவர் பாத்ரூம் அருகில் தீவைத்து கொளுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு லதா கோர்டில் சாட்சியம் அளித்திருந்தால் அது பொய். திவ்யா எனது அண்ணன் மகள். மேற்படி திவ்யாவை சாட்சி சங்கீதாவிடம் எனது மனைவி தூக்குமாட்டி இறந்துவிட்டதாக கூறியுள்ளார் என்று சொன்னால் அது தவறு. 1வது எதிரிக்கும் எனக்கும் தவறான உறவு இருந்தது என்று சொன்னாலும் அதன் காரணமாகவே நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. 1, 2 எதிரிகள் எனது அண்ணி மற்றும் அண்ணன் என்பதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் சம்பவ இடத்திலேயே நான் இல்லை என்பதால் எனது சாட்சியம் ஏற்றுகொள்ளத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல், நான் சொல்லக்கூடிய விதம் மற்றும் நேரத்தில் நர்ன சம்பவத்தன்று வீட்டிற்கு வரவில்லை என்று சொன்னாலும் எனது மனைவி இறந்த தகவல் கூறி தான் நான் வீட்டிற்கே வந்தேன் என்று சொன்னாலும் சரியல்ல.

S.J.

எங்களது வீட்டில் மிக்சி இயங்கும் நிலையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை-** இல்லை.

S.J.